# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கத்தறகம கிரிவெஹெர ரஜமஹா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2003, நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2003, நவெம்பர் மாதம் 28 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 9.25 தபாற் செலவு : ரூபா 4.50

## 2003 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 28/2002

### கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமானதொரு மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப் பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்பு பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் ; — முன்னுரை.

சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காக வும் கருமங்களுக்காகவும் அமைக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும்; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் ; அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தின் உறுப்பினர்களாக இப்போதுள்ளவர்களும், அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றம்" என்ற பெயரின்கீழும், மகுடத்தின் கீழும், இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக — கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை அபிவிருத்தி மன்றத்தினை கூட்டிணைத்தல்.

வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் ஒரு பொது இலச்சினையை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும், திருத்தவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :

(அ) கத்தறகம கிரிவெஹெர ரஜமகா விகாரை மற்றும் அத்துடன் இணைந்துள்ள வேறு விகாரைகளின் கட்டிடங்களை அமைத்தலும் தற்போதுள்ள கட்டிடங்களைப் பேணுதலும், சீரமைத்தலும் ;

(ஆ) சுற்றாடலைப் பாதுகாப்பதில் மக்களை ஊக்குவித்தலும், சுற்றாடலை வெற்றிகரமாக முகாமை செய்வது சம்பந்தமாக அவர்களுக்கு அறிவூட்டுதலும் ;

(இ) கத்தறகம புனித நகரத்திலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க சின்னங்களையும் கலாசார பொக்கிஷங்களையும் பாதுகாத்தல் ;

(ஈ) பௌத்த மதத்தவர்களின் மதரீதியான கல்வியை மேம்படுத்தல் ;

(உ) கத்தறகம கிரிவெஹெர விகாரையில் வதியும் பிக்குகளுக்கான கல்வி வசதிகளை வழங்குதலும், அவர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்தலும் ;

(ஊ) கத்தறகம கிரிவெஹெர விகாரை அமைந்துள்ள பிரதேசத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் புராதனக் கலை வடிவங்கள் உள்ளிட்ட கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தல்;

(எ) சர்வதேச ரீதியாக சமயப் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுதல் ;

(ஏ) பௌத்த தத்துவங்களையும் வாழ்க்கை முறையையும் பேணிப் பாதுகாத்தலும், பரப்புதலும் ;

(ஐ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஏனைய பௌத்த அமைப்புகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல் ; அத்துடன்

(ஒ) மேலே சொல்லப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான, உகந்தவையாக அல்லது இடை நேர்விளைவாக இருக்கக்கூடிய வேறேதேனும் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், பொருத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், மூடிவுறுத்தவும் ; பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் ; மானியக் கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் ; அதன் நிதியங்களை முதலிடு செய்யவும் ; அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலிடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலை நீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர், உபதலைவர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப்படக்கூடிய ஆறு பேருக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட முகாமைக்குழு ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிருக்கும் விதிகளுக்கிணங்கவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும் வணக்கத்துக்குரிய அளுத்வெவ சோரத தேரர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் முகாமைக் குழுவில் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) காலத்திற்குக்காலம் ஏதேனும் பொதுக் கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும், இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

(அ) உறுப்பினரை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும், உறுப்பினர் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தாமே பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அதன் தத்துவங்களையும் குழு உறுப்பினர்களின் ஒழுக்கமும் கடமைகளும் பதவிக்காலமும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும் ஒழுக்கமும், கடமைகளும், பணிகளும் ;

(உ) குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதிலும், நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும்,

இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் கூரும மாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளைப் பேணுதலும், கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதியொன்று ஆக்கப்படும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப் படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

7. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றம், நன்கொடைகள், உதவுதொகைகள் அல்லது கட்டணங்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் முகாமைக் குழு தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது சீராக்குவதற்குமான நோக்கத்துக்காக கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற்பாலவையும் மன்றத்துக்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.

**8.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படவேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய எல்லாத் தனிசுகள், ஒப்பணங்கள், உதவு தொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தால் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய அந்த ஆதனங்களை விற்கவும், ஈடுவைக்கவும், குத்தகைக்குக் கொடுக்கவும், பரிமாறிக் கொள்ளவும் அல்லது வேறுவகையில் கையாளவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவரதும், செயலாளரதும் அல்லது பொருளாளரதும் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாகவிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம், செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிட்டவர்களும் அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாகவோ, பாதிக்கப்பதாகவோ இருத்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.